தகவல். குறிப்பிட்டு இன்னர் சேருவதற்கு முயற்சித்தார். ஆனல் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்தால், அதற்கு மேல் விசாரித்து விடை அளிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : இந்தப் பள்ளியில் அரிசன மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அப்படியானல் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புகார் வந்திருந்தால் நிச்சயம் சொல்லியிருப்பேன். மூடி மறைக்கவில்லை, என்னிடம் அப்படி தகவல் ஒன்றுமில்லை என்றுதான் சொன்னேன்.

அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகை

*304 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கு கல்விக்காகக் கொடுக்கப்படும் சலுகைகள் விபரம் என்ன?

(இ) அரசியல் தியாகிகளின் குழந்தைகளிடமிருந்து படிப்புக்கு ஸ்காலர்ஷிப் கோரி 1964-65, 1965-66-ல் வந்த மனுக்கள் எத்தனை?

(உ) எத்தனை பேருக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது?

(எ) பாக்கியுள்ள மனுக்களுக்கு வழங்காத காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவரத்திலிருந்து சென்ற ஆண்டு வரை இந்தக் கல்விச் சலுகைகள் வழங்கப்பட்ட விவரத்தைப் பார்க்கிற பொழுது, ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் மாணவர்களுக்குத் தகுதி இருந்தால் கூட, ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்ற விவரம் தெரியவருகிறது. சென்ற ஆண்டு இந்த நிலை இருந்தால் கூட இந்த ஆண்டிலிருந்தாவது தகுதி உள்ள எல்லா மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்குக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுதோறும் இதற்கென்று குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இது போதாது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது, மேலும் நிதி ஒதுக்குகிறர்கள்.

---

[a] Appendix I on pages 93-97 infra.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தச் சலுகை அளிக்கப்படுகிற விவரத்தைப் பார்க்கிற நேரத்தில், 'இறந்துபோன பிள்ளைவழிப் பேரன் பேத்திகள் ஆகியோர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களோடு இந்தச் சலுகை முடிவடைந்துவிடுமா அல்லது பரம்பரையாக இந்தச் சலுகை நீடிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரம்பரையாக இது நீடிக்கப் படமாட்டாது.

திரு. கே. டி கோசல்ராம் : கனம் அமைச்சர் அவர்கள் பதிலி லிருந்தும், இந்த அறிக்கையிலிருந்தும், பல பேர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. இந்தக் காரணத்தினால், நிதி ஒதுக்கல் போதுமா என்று குறிப்பிடப் படுவதால், அதற்குரிய நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விடை அளித்தேன். நிதி போதாது என்று அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவரப்படும்பொழுது, மேலும் வேண்டிய நிதியைச் சில சமயங்களில் அரசாங்கம் அனுமதித்து ஒதுக்குகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆண்டுதோறும் இந்த வகைக் காக மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது என்ற விவரம் சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

District Educational Officers.

* 305 *Q.*—SRI M. S. SELVARAJAN :
SRI GOMATHI SANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts of District Educational Officers that are vacant and the dates from which they are vacant; and

(*b*) the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Three as on 31st July 1966.

District Educational Officer, Tiruvannamalai.—Vacant from 24th June 1966 consequent on the appointment of the incumbent as Special Officer for School Meals Programme.

District Educational Officer, Madurai.—Vacant from 1st July 1966 consequent on the promotion of the incumbent as Principal.

District Educational Officer, Saidapet.—Vacant from 16th July 1963 consequent on the promotion of the incumbent as Divisional Inspector of Schools.